1972 ஆகஸ்ட் 18]

Any specific proposals from Air France will be considered when received in consultation with the Government of India whose approval is necessary for obtaining foreign assistance and co-operation.

Madhavaram Milk Project

* 69. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether large amounts are due to the Madhavaram Milk Project by Government and Private Educational Institutions in Madras City; and

(*b*) if so, the details thereof ?

மாதவரம் பால்பண்ணை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள அரசு—தனியார் கல்வி நிறுவனங்களிடமிருந்து மாதவரம் பால்பண்ணைக்கு ஏராளமான தொகைகள் சேரவேண்டியுள்ளனவா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) : சட்டமன்ற மேலவையில் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Impaling of Jains in the Festivals

* 70 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the impaling of Jains is celebrated in the festivals of the Hindu Temples even now ?

திருவிழாக்களில் சமணர்களைக் கழுவேற்றும் நிகழ்ச்சி

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சமணர்களைக் கழுவேற்றும் நிகழ்ச்சி இன்றும் திருக்கோயில் திருவிழாக்களில் நிகழ்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

@ 182-ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 18

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் மதுரைக்கு நான் சென்றபொழுது, மதுரை கோயிலில் திருவிழா தொடர்ந்து நடைபெறுவதாலும், 10 ஆண்டுகளுக்கு முன் இதை நிறுத்த வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டது. ஆனால், அது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை. மீண்டும் இப்படி நடந்தால், நிறுத்தும்படி அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த விதமான செய்கை பிற மதத்தினர் மனத்தைப் புண்படுத்தும் என்று ஏற்கெனவே சர்ச்சை எழுந்தது. 195[illegible]-ல் அந்த நிகழ்ச்சி நடத்தக் கூடாது என்று நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் ஓதுவாரைக் கொண்டு மட்டும் அன்றையத் தினம் திருஞான சம்பந்தர் பற்றி விரிவுரை நடத்தப்பட்டது நிறுத்தியது என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மேற்கொண்டு நடந்தால் அதைத் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. கே. இ. ராஜாராம் : மதுரை நகரில் மட்டுமல்ல, வேறு இடங்களிலும் கழுவேற்றுவது என்று திருவிழாக் காலங்களில் நடைபெறுவதை விசாரித்து அங்கே எல்லாம் நடக்காமலிருக்க அரசாங்கம் தடை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்பொழுது, நாஸ்திகத்தின் பாற்பட்டது என்ற பிரசாரம் நடைபெறாமல் தடுக்க மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒத்துழைத்தால் நியாயமாக இருக்கும்.

திரு. கே. இராஜாராம் : பிற மதத்தைப் புண்படுத்தும் விழா நடத்தக்கூடாது என்று, 'செக்யூலர் ஸ்டேட்' ஆக இருப்பதால், எல்லோரையும் ஆதரித்துப் போக வேண்டியிருப்பதால், ஒரு மதத்தைத் தாக்கிப் புண்படுத்தும் போக்கைத் தடுப்பது கடமை. எல்லோரும் ஒத்துழைப்பு கொடுப்போம் என்று முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.